

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 287 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 15 – வெள்ளிக்கிழமை 29 மே 2026 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 287 : Thiruvalluvar Year - 2057 - Vaikasi 15 - Friday 29 May 2026 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## பெட்ரோல் - டீசல் விலை தொடர்ந்து அதிகரிப்பு!

புதுடெல்லி, மே 29-

ஐந்து மாநிலத் தேர்தல் முடிந்த ஒரு வாரத்திற்குள் ஒன்றிய அரசு பெட்ரோல், டீசல் விலையை தொடர்ந்து உயர்த்தி வருகிறது.

பெட்ரோல், டீசல் விலை கடந்த 15ம் தேதியில் இருந்து ஏறத் தொடங்கியது அன்றைய தினம் பெட்ரோல் லிட்டருக்கு 3 ரூபாய் 6 காசும், டீசல் 3 ரூபாய் 8 காசும் உயர்ந்தது

அதன் தொடர்ச்சியாக கடந்த 19ம் தேதி பெட்ரோல் 74 காசும், டீசல் 78 காசும் அதிகரித்தது தொடர்ந்து 3வது முறையாக கடந்த 23ம் தேதி பெட்ரோல் 80 காசும், டீசல் 85 காசும் உயர்ந்து காணப்பட்டது.

இதனைத்தொடர்ந்து 4வது முறையாக பெட்ரோல் லிட்டருக்கு 2 ரூபாய் 46 காசும், டீசல் லிட்டருக்கு 2 ரூபாய் 57 காசும் அதிகரித்தது.

கடந்த 10 நாட்களில் பெட்ரோல், டீசல் விலை 5வது முறையாக உயர்த்தப்பட்டது. அதன்படி, நாடு முழுவதும் பெட்ரோல் லிட்டருக்கு 34 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.107.87க்கும், டீசல் லிட்டருக்கு 23 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ. 99.66 க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில், நாடு முழுவதும் பெட்ரோல், டீசல் விலை 6வது முறையாக நேற்று முன்தினமும் உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி பெட்ரோல் லிட்டருக்கு 33 காசுகள் உயர்த்தப்பட்டு ஒரு லிட்டர் 108.20 ரூபாய்க்கும், டீசல் லிட்டருக்கு 32 காசுகள் உயர்த்தப்பட்டு ஒரு லிட்டர் 99.98 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. சி.என்.ஜி. எரிவாயுவும் கிலோவுக்கு 3.50 ரூபாய் அதிகரித்துள்ளது.

தொடர்ந்து அதிகரித்து வரும் பெட்ரோல், டீசல் விலையால் மக்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.

# இஸ்லாமியர்களுடனான உறவும் நெருக்கமும் என்றென்றும் தொடரும்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் நெஞ்சம் கனிந்த பக்ரீத் பெருநாள் வாழ்த்து!



**சென்னை, மே 29 -**

**"இஸ்லாமியர்களுடனான உறவும் நெருக்கமும் என்றென்றும் தொடரும்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள பக்ரீத் வாழ்த்துச் செய்தியில் உறுதிபடக் கூறியுள்ளார்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:-

**தியாகத் திருநாளான பக்ரீத் திருநாளில், என்றென்றும் என் நேசத்திற்கும் பாசத்திற்கும் உரியோராகத் திகழும் இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இனிய வாழ்த்துகள்! அவர்களது வாழ்வில் நலமும் வளமும் பெருகட்டும்!**

**"ஈத்துவக்கும் இன்பம்" என்று வள்ளுவப் பெருந்தகையால் போற்றப்பட்ட ஈகைப் பண்போடு, ஈட்டிய பொருளில் ஒரு பகுதியை ஏழை எளியோர் இன்னல் தீர வழங்கி மகிழ்வதை வாழ்வறமாகக் கொண்டு, நபிகள் நாயகம் வழங்கிய அறிவுரைகளை வாழ்க்கை நெறியாகக் கடைப்பிடித்து வாழும் இஸ்லாமியப் பெருமக்களது வாழ்வில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலைபெறட்டும்.**

**இஸ்லாமியச் சமூகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையேயான உறவு, அரசியல் மற்றும் சமூகக் காரணங்களைத் தாண்டிய ஆழத்தையும், மேன்மையையும், உண்மையான பிணைப்பையும் கொண்டது.**

**கழகம் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இஸ்லாமியச் சமூகத்தின் பாதுகாப்புக்காகவும் உரிமைகளுக்காகவும் தோளோடு தோள் நின்று போராடும் உணர்வைக் கொண்ட உற்ற தோழமை என்பதை விவரிக்கத் தேவையில்லை. அந்த உறவும் நெருக்கமும் என்றென்றும் தொடரும் என்பதை, இந்த நன்னாளில் மேலும் உறுதிசெய்ய விரும்புகிறேன்.**

**இஸ்லாமிய மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் கனிந்த பக்ரீத் பெருநாள் நல்வாழ்த்துகளை மீண்டும் உரித்தாக்குகிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

## கோணிப்பை தட்டுப்பாடு: நெல் கொள்முதல் நிறுத்தம்!

திருவள்ளூர், மே 29–

திருவள்ளூர் அருகே, கோணிப்பை தட்டுப்பாடு காரணமாக நெல் கொள்முதல் நிலையங்களில், கொள்முதல் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், அறுவடை செய்த நெல் மழையில் நனைந்து வீணாகி வருவதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம் கரிக்கலவாக்கம் அடுத்த வதட்டூர் பகுதியில் உள்ள ஒன்றிய அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில், நெல் மூட்டைகளை ஏற்றிச் செல்ல லாரிகள் இல்லாததால், கொள்முதல் பணிகளை அதிகாரிகள் பாதியிலேயே நிறுத்தி விட்டுச் சென்றனர்.

இதனால் கடந்த இரண்டு வாரங்களாக விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்ட 2 ஆயிரம் நெல் மூட்டைகளை வைக்க போதிய இடவசதி இல்லாததால், இ–சேவை மையத்திலும், கிராமத்தில் உள்ள கோவிலிலும் பாதுகாப்பின்றி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் நெல் கொள்முதல் நிலையங்களில் கோணிப்பை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் சில நாட்களாக நெல் கொள்முதல் செய்யும் பணியும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை, வீட்டின் அருகிலும், விவசாய நிலங்களிலும் சாலை ஓரங்களிலும் வைத்து பாதுகாத்து வருகின்றனர்.

மேலும், திடீர் திடீரென பெய்யும் கோடை மழையிலிருந்து, நெல்லை பாதுகாப்பதில், சிரமம் ஏற்படுவதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர். எனவே, தமிழக அரசு உடனடியாக போர்க்கால அடிப்படையில் நெல் மூட்டைகளை கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளது.

### 'உடன்பிறப்பின் குரல்' இணையதளத்தில் இதுவரை 4,60 லட்சம் பேர் பதிவு!

# அடுத்த கட்ட நடவடிக்கைகளை நான் திட்டமிட மே 31-க்குள் கருத்துகளைப் பதிவிடுங்கள்!

உடன்பிறப்பின் குரல்

Udanpirapin Kural

DRAVIDA MUNNETRA KAZHAGAM

## கழகத்தினருக்கு – தலைவர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, மே 29-**

**கழக உடன் பிறப்புகள் எவ்விதத் தயக்கமுமின்றி தங்களது கருத்துகளை இணையத்தில் பதிவிடுமாறு கழகத் தலைவர் - மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார்.**

**அதன்படி, 'உடன்பிறப்பின் குரல்' இணையதளத்தில் இதுவரை 4.60 லட்சம் பேர் தங்கள் கருத்துக்களைப் பதிவிட்டுள்ளனர் எனவும், அடுத்த கட்ட நடவடிக்கைகளை தாம் திட்டமிட இம்மாதம் 31-ஆம் தேதிக்குள் தங்களது கருத்துக்களை இணையதளத்தில் பதிவிடுமாறும் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:-

**அன்பு உடன்பிறப்புகளே,**

http://udanpirapinkural.in இணையதளத்தில் இதுவரை 4.60 லட்சம் கருத்துகளைப் பெற்றுள்ளோம். இந்த இணையதளத்தின் முக்கிய நோக்கமே உடன்பிறப்புகள் அனைவரும் எவ்வித் தயக்கமுமின்றி உங்கள் மனதில் தோன்றும் கருத்துகளைப் பதிவு செய்ய வேண்டும் என்பதுதான். உங்கள் கருத்துகள் நேரடியாக எனக்கே வந்து சேரும்.

இந்த இணையதளத்தில் உடன்பிறப்புகள் மட்டுமல்லாமல், கழக நிர்வாகிகள், கழக அனுதாபிகள், பொதுமக்கள் என அனைவரும் அளிக்கும் ஆலோசனைகளை ஆராய்ந்து நம் அடுத்தகட்ட நடவடிக்கைகளை நான் திட்டமிடுவேன். எனவே மே மாதம் 31 ஆம் தேதிக்குள் உங்கள் கருத்துகளை http://udanpirapinkural.in இணையதளத்தில் பதிவு செய்யவும்.

கழக மாநிலப் பொறுப்பாளர்களும், கழக மாவட்டச் செயலாளர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், மற்ற முக்கியப் பொறுப்பாளர்கள் அனைவரும் மறக்காமல், இந்தச் செய்தி அனைத்து உடன்பிறப்புகளுக்கும் சென்றடையும் வண்ணம் உங்களுடைய சமூக வலைதளப் பக்கங்களிலும் Whatsapp குழுக்களிலும் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### பினராயி விஜயன் மீதான 'ரெய்டுகள்' கண்டிக்கத்தக்கவை!

# அமலாக்கத்துறையின் போக்கு மிகவும் தவறானது!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, மே 29-**

**கேரள முன்னாள் முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்களுக்கு எதிரான அமலாக்கத்துறையின் ரெய்டுகள் கண்டிக்கத்தக்கது என்றும், அமலாக்கத்துறையின் இத்தகையப் போக்கு மிகவும் தவறானது என்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கேரள மாநில முன்னாள் முதலமைச்சர் தோழர் பினராயி விஜயன் அவர்களுக்கு எதிரான அமலாக்கத்துறை ரெய்டுகளை வன்மையாகக் கண்டிக்கிறேன்.**

**எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எதிராக மத்திய விசாரணை அமைப்புகளை ஏவிவிடும் இத்தகைய போக்கு மிகவும் தவறானது.**

**"பினராயி விஜயன் அவர்கள் ஏன் இதுவரை பா.ஜ.க.வால் குறிவைக்கப்படவில்லை?" எனப் பொறுப்பற்ற முறையில் தொடர்ந்து குற்றம்சாட்டி வந்த சில காங்கிரஸ் தலைவர்களின் கூற்றுகள் பொருளற்றவை என்பதையும் இந்த ரெய்டுகள் அம்பலப்படுத்தியுள்ளன.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




முதல் போட்ட அமைச்சர் பேசுகிறார் | முதலமைச்சர் பேசுவதில்லை

### பயிர்க் கடன் தள்ளுபடி திட்டத்தில் குளறுபடிகள்!

# தமிழ்நாடு முழுவதும் ஜூன்-1 முதல் ஆர்ப்பாட்டம் - மடிப்பிச்சை!

## விவசாயச் சங்கங்கள் அறிவிப்பு!

தஞ்சை, மே 29-

த.வெ.க. அரசு அறிவித்த கூட்டுறவு பயிர்க்கடன் தள்ளுபடி திட்டத்தில் உள்ள நிபந்தனைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, ஜூன் 1ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்கள் நடைபெறும் என பல்வேறு விவசாயிகள் சங்கங்கள் அறிவித்துள்ளன.

தேர்தல் வாக்குறுதியில் கூறியபடி, நிலத்தின் அடிப்படையில் பயிர்க் கடன்களை நிபந்தனையின்றி முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

ரூ.50,000க்கு மேல் கடன் வைத்துள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குத் தள்ளுபடி இல்லை என்ற நிபந்தனை விவசாயிகளைப் பெருமளவில் ஏமாற்றியுள்ளது.

**த.வெ.க. அரசுக்கு கண்டனம்!**

மேலும் ஒன்றிய பா.ஜ.க. அரசு உயர்த்திய உர விலையைக் கண்டித்தும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தை ஒழிப்பதைக் கண்டித்தும் தொடர் கண்டனங்கள் எழுந்துள்ளன.

கட்சி பாகுபாடின்றி அனைத்து விவசாயிகளின் கூட்டுறவு பயிர்க்கடன்களையும் முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு உரிய ஆதார விலை மற்றும் பிற மானியங்கள் தொடர்ந்து கிடைக்க வேண்டும்.

கடந்த 2020ம் ஆண்டு விவசாயிகள் வேளாண் சட்டத் திருத்தத்துக்கு எதிராகப் போராட்டத்தை நடத்தினர்.

அப்போதே குறைந்த பட்ச ஆதார விலை கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

**மடிப்பிச்சை போராட்டம்!**

தமிழ்நாடு அரசு அறிவித்த பயிர்க்கடன் தள்ளுபடி முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து, டெல்டா மாவட்ட விவசாயிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் முன்பாக 'மடிப் பிச்சை ஏந்தி' நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முதலமைச்சர் விஜய் அறிவித்த இந்த கடன் தள்ளுபடி திட்டம் தங்களை ஏமாற்றும் வகையில் உள்ளதாகக் கூறி அவர்கள் இப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முந்தைய ஆட்சிக் கால பயிர்க்கடன் மற்றும் தற்போது அறிவிக்கப்பட்ட கடன்கள் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படவில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

முழுமையான கடன் தள்ளுபடி வழங்காததைக் கண்டித்து, நெற்றியில் பட்டை நாமம் அணிந்து, கைகளில் கையேந்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் பிச்சை எடுக்கும் நூதன போராட்டத்தில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.